# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பாலியல் மற்றும் பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைகளைத் தடுத்தல்

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கையேடு

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிதியுதவியுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பாலியல் மற்றும் பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைத் தடுப்புக் குழுவால் (SGBVC) வெளியிடப்பட்டது.

இலச்சினை விளக்கம்

இலச்சினையின் நடுவில் உள்ள ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பால்நிலைச் சின்னமானது, பால்நிலைப் பாகுபாடு இல்லாமல் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சேவை செய்வதற்கான குழுவின் நோக்கத்தைக் குறிக்கின்றது. ஆண் மற்றும் பெண் கைகள், உதவி தேவைப்படுபவர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கான ஒற்றுமையைக் குறிக்கின்றன.

இரண்டு மூலைகளிலும் உள்ள தாமரை இதழ் வடிவமைப்பு குழுவின் நோக்கங்களின் தூய்மையைக் குறிக்கின்றது.

இலச்சினையின் இரண்டு மூலைகளும் குழுவின் நோக்கங்களை அடைவதிலான கடினம் இல்லாத தன்மை மற்றும் நெகிழ்வுத்தன்மையைக் குறிக்கும் வகையில் வளைந்திருக்கும். தாமரை இதழ்களின் வடிவமைப்பில் இருந்து விழும் மென்மையான சரிவுகள் அந்த உண்மையை வலியுறுத்துகின்றன.

மெரூன் நிறப் பின்னணி வலிமை மற்றும் லட்சியத்தைக் குறிக்கின்றது. அதே நேரத்தில் தங்க நிற வெளிப்பாடானது இரக்கம், அரவணைப்பு மற்றும் ஞானத்தைக் பிரதிபலிக்கின்றது

உருவாக்கியவர்: K.M.C.W.B. விஜேரத்ன (MBBS, UOP)

## துணைவேந்தரின் செய்தி

பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை தடுப்புக் குழுவினால் தொகுக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை பற்றிய கையேடு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை என்றால் என்ன, அத்தகைய சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போது என்ன செய்ய வேண்டும், அதனைத் தடுக்க எவ்வாறு உதவுவது போன்றவற்றை பல்கலைக்கழக சமூகத்திற்கு கற்பிப்பதற்காக இக்கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. வாசகர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் கேள்வி பதில் வடிவத்தின் மூலம் தலைப்பு தொடர்பான பல்வேறு சிக்கல்கள் மூலம் வழிநடத்தப்படுகிறார்கள். கையேட்டில் வரைவிலக்கணங்கள் மற்றும் முக்கியமான விடயங்களை விளக்குவதற்கு நிகழ்நிலவரம் மற்றும் வரைபடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் ஈடுபாடு மற்றும் ஆதரவுடன் பல்கலைக்கழகத்தில் பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை இல்லாத சூழலை உருவாக்குவதற்கான பல்கலைக்கழகத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக கையேடு உள்ளது. இந்த இலக்கை நோக்கிய பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை தடுப்புக் குழுவின் போற்றத்தக்க அர்ப்பணிப்பு பரிந்துரைக்கப்பட வேண்டியதும் பாராட்டப்பட வேண்டியதும் ஆகும். இம்முயற்சி வெற்றியடைய வாழ்த்துகிறேன்

பேராசிரியர் எம்.டி. லமாவன்ச
துணை-வேந்தர்

## முன்னுரை

பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையானது உலகம் முழுவதும் பரவலாக காணப்படும் எண்ணக்கருக்களாகும். அதேபோன்று , இலங்கையில் உயர்கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் இப்பிரச்சினை காணப்படுகின்றது. இலங்கையில், மக்கள் மத்தியில் குறிப்பாக பல்கலைக்கழக சமூகத்தினரிடையேயும் பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகின்றது. இது தொடர்பான எண்ணக்கருக்களைப் குறிப்பிடும் விதமாக இக்கையேடு அமைக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பாகக் காணப்படும் அலட்சியதன்மை பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்ய முன்வருவதை தடுப்பதோடு முறைபாடு செய்யத் துணியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரோதமான சூழலை எதிர்கொள்ளச் செய்கின்றது.

இக்கையேட்டின் நோக்கங்கள்:

1. பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை பற்றிய புரிதலை வழங்குதல்.

2. பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல் மற்றும் பால்நிலைசார் வன்முறை பற்றிய புகார்களை விசாரணை செய்தலும் அவற்றை தடுப்பதற்குமான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கொள்கை மற்றும் சட்டங்களின் விதிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

3. பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான தவறான எண்ணங்களை அகற்றுதல் மற்றும் இத்தகைய துன்புறுத்தல் தொடர்பான வன்முறையை நோக்கிய சகிப்புத்தன்மையின்மைக் கலாசாரத்தை வளர்த்தல்.

## பொருளடக்கம்


1. சொற்பதங்களுக்கான வரைவிலக்கணங்கள்: 1
1.1. பால் என்றால் என்ன?
1.2. பால்நிலை என்றால் என்ன?

2. பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை ஆகியவற்றுக்கான வரைவிலக்கணங்கள்: 2
2.1. பாலியல் துன்புறுத்தல்
2.2. பால்நிலை சார் துன்புறுத்தல்
2.3. பாலியல் வன்முறை

3. பகிடிவதையானது பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் கீழ் வருமா? 5

4. இரு நபர்களுக்கிடையில் ஒருமித்த பாலியல் செயல்கள் பாலியல் மற்றும் பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் கீழ் வருமா? 6

5. பெண்கள் எப்பொழுதும் பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களா மற்றும் ஆண்கள் எப்போதும் பெண்களை பலியாக்குபவர்களா? 8

6. பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை பற்றி நீங்கள் தெரிந்து கொள்வது ஏன் அவசியம்? 9

7. பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைக்கான காரணங்கள் யாவை? 10

8. பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் பின் விளைவுகள் யாவை? 12

9. பல்கலைக்கழகத்தில் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைத் தடுப்புக் குழுவின் வகிபாகம் யாது? 12

10. நீங்கள் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டால் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது? 13

11. பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான முறைபாடுகளை விசாரிப்பதற்கான நடைமுறை என்ன? 14

12. முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகள் யாவை? 14

13. பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான முறைபாடுகளின் இரகசியத்தன்மை என்ன? 15

14. பழிக்கு பழிவாங்கல்கள் பற்றிய பல்கலைகழக்கத்தின் நடவடிக்கை யாது? 15

15. பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கக் கூடிய சட்ட மற்றும் மருத்துவ உதவி என்ன? 16

16. குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான பல்கலைக்கழகத்தின் ஒழுங்கு நடைமுறை என்ன? 17

17. பல்கலைக்கழகத்தைப் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை இல்லாததாக மாற்ற நீங்கள் செய்யும் நடவடிக்கை என்ன? 18

## 1.வரைவிலக்கணங்கள்

### 1.1 பால் என்றால் என்ன?

**பால் என்பது** மனிதர்களை பெண் அல்லது ஆணாக வரையறுக்கின்ற உயிரியல் மற்றும் உடலியல் பண்புகளைக் குறிக்கிறது. இவ்வகைப்பாடானது முதன்மை பாலுறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பிறப்பிலிருந்தே ஆரம்பமாகின்றது. பருவமடையும்போது இரண்டாம் நிலை பாலியல் பண்புகள் (எ.கா. மார்பகங்கள் மற்றும் முகத்திலுள்ள முடிகள்) இவ்வேறுபாட்டிற்குப் பங்களிப்பு செய்து மேலும் அதனை மேம்படுத்துகின்றன. ஆனால் ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாருடைய உயிரியல் பண்புகளின் கலவையுடன் பிறப்பதால். இவ்விரு வகைகளில் ஏதேனும் ஒன்றில் நேரடியாக உள்ளடங்காத ஒரு குறிப்பிட்ட சிறிய சதவீத மக்கள் உள்ளனர். இந்த வகையினர் “ஊடுபாலினம்” என்று அழைக்கப்படுகின்றனர்.

### 1.2 பால்நிலை என்றால் என்ன?

**பால்நிலை என்பது** மேலே விபரிக்கப்பட்ட உயிரியல் வேறுபாடுகளுக்கு ஒரு குறிப்பிட்ட கலாசாரம் கூறும் சமூக அர்த்தங்களைக் குறிக்கின்றது. இந்த அர்த்தங்கள் கலாசாரத்திற்கு கலாசாரம் மற்றும் சமூகத்திற்கு சமூகம் மாறுபடும்.
இவ்அர்த்தங்களின் அடிப்படையில், உயிரியல் ரீதியாக ”பெண்” அல்லது ”ஆண்” என வகைப்படுத்தப்படுவார்கள். அந்தச் சமூகத்திலுள்ள ”ஆண்கள்” மற்றும் ”பெண்களுக்குப்” பொருத்தமானது என அச்சமூகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பண்புகள், நடத்தைகள் மற்றும் மதிப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு சமூகமயப்படுத்தபடுத்தப்பட்டு இசைவாக்கப்படுத்தப்படுகின்றனர். இந்தப் பால்நிலை எதிர்பார்ப்புகள் ஆடை முதல் உடலியல் தோற்ற நடத்தை மற்றும் மதிப்புகள் வரை காணப்படும். ஊதாரணமாக,, இலங்கைச் சமூகத்தில் ஒருவர் பெண்ணாகவோ அல்லது ஆணாகவோ இருந்தால், அவர் சார்ந்த கலாசாரக் குழுவைப் பொறுத்து அவருக்குரிய ஆடைக் கட்டுப்பாடு உள்ளது. இவ்வாறு பால்நிலையை ஒதுக்கீடு செய்கின்றபோது அது இருமை பால்நிலை என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில், பால்நிலையானது நேரடியாக பாலியல் வேறுபாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு மேலதிகமாக, இருமை பால்நிலை அல்லாத சமூகம் ஒன்று உள்ளது என்பதை நாம்

நினைவில் கொள்ள வேண்டும், அதாவது, இத்தன்மையானவர்கள் அவர்களுடைய உயிரியல் பாலியல் தன்மைக்கு ஏற்ப செயல்படாதவர்கள். சிலவகையான கலாசாரங்களும் சமூகங்களும் இந்த சமூகத்தினரை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு உரிமைகளை வழங்குகின்றன, எடுத்துக்காட்டாக, இந்தியா நேபாளம் போன்ற நாடுகளில் "மூன்றாம் பால்நிலை" என்ற சொற்பதம் அவர்களை வகைப்படுத்த பயன்படுத்தப்படுகின்றது.
இப்பால்நிலை வேறுபாடுகள் சமூக அந்தஸ்தில் வேறுபாடுகளை ஏற்படுத்துவதோடு வளங்கள் மற்றும் அதிகாரத்தை அணுகுவதில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்த வழிவகுக்கும். தந்தை வழிச் சமூகங்களில் பெணகள் மற்றும் மூன்றாம் பால்நிலையைச் சேர்ந்தவர்களை விட ஆண்கள் அதிக அதிகாரத்தைக் கொண்டுள்ளனர்.
கலாசாரம் மற்றும் சமூகத்தைப் பொறுத்து, ஆண் மற்றும் பெண் என வகைப்படுத்தப்பட்டவர்களின் மீது சமூக எதிர்பார்ப்புகள் கடுமையாகவோ அல்லது மென்மையாகவோ திணிக்கப்படலாம். இவ் எதிர்பார்ப்புகள் கடுமையாக இருக்கும் இடத்தில், அதற்கு இணங்கத் தவறியவர்கள் பழிவாங்கல்கள் மற்றும் பாகுபாட்டிற்கும் துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கும் உட்படுத்தப்படலாம்.
ஆயினும்கூட, பாலியல் அல்லது பால்நிலை வேறுபாடுகள் எதுவாக இருப்பினும், நாம் அனைவரும் சமஉரிமைகளைக் கொண்ட மனிதர்கள் அத்தோடு துன்புறுத்தல் மற்றும் வன்முறையின்றி வாழ்வதற்கான உரிமையைப் பெற்றுள்ளோம் என்பதை நாம் அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

## 2. பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைக்கான வரைவிலக்கணம்

### 2.1 பாலியல் துன்புறுத்தல்

பாலியல் துன்புறுத்தல் என்பது பாலியல் விருப்பம் கொண்டவர்களால் மேற்கொள்ளப்படும் பல வகையான திணிக்கப்படும் விரும்பத்தகாத பாலியல் செயல்கள் அல்லது பாலியல் சலுகைகளுக்கான கோரிக்கைகளை உள்ளடக்கிய ஒரு பரந்த சொற்பதமாகும். இப்பாலியல் துன்புறுத்தலானது வாய்மொழி, உடல், சைகை, காட்சி, எழுத்து, அல்லது இலத்திரனியல் வழியாக மேற்கொள்ளப்படலாம்.

**உடல் ரீதியான பாலியல் துன்புறுத்தல்கள்** : தொடுதல், கிள்ளுதல், தடவுதல், பின்தொடர்தல்.

**வாய்மொழி வழியான பாலியல் துன்புறுத்தல்கள் :** விரும்பத்தகாத பாலியல் நகைச்சுவைகள் மற்றும் கேலிகள், பாலியல் இயல்பு தொடர்பான பொய்யான வதந்திகளை பரப்புவது, பாலியல் ரீதியாக இழிவுபடுத்தும் வகையில் பெயரிடுதல் மற்றும் பாலியல் தூண்டுதல்கள்.

**வாய்மொழிச் சொற்கள் அல்லாத துன்புறுத்தல்கள்** : கூச்சலிடுதல் அல்லது ஒருங்கிணைந்து முறைத்துப் பார்ப்பது, ஒரு நபரை நடத்தை மூலம் அசௌகரியமாக உணர வைத்தல், ஒருவரின் நாக்கை வெளியே நீட்டுவது அல்லது உதடுகளை நாக்கினால் தொடுவது அல்லது கண் அடிப்பது போன்ற புண்படுத்தும் சைகைகள், பாலியல் ஈர்ப்பினை ஏற்படுத்தும் வகையில் உரத்து விசிலடித்தல், சாவி துளைகள் வழியாக எட்டிப்பார்த்தல் ஒருவரின் அந்தரங்க உறுப்புகளை விரும்பத்தகாதவாறு வெளிப்படுத்தல்.

**காட்சி சார்பான பாலியல் துன்புறுத்தல்கள் :** ஒருவரின் அனுமதியின்றி புகைப்படங்களை எடுப்பது அல்லது காணொளி எடுப்பது, எ.கா. பொது குளியலறையில் நிழல்பட கருவிகளை வைத்தல், அவர்களின் விருப்பத்திற்கு மாறாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள்/ காணொளிகளைப் பயன்படுத்தி மக்களை மிரட்டுவது, அல்லது அவர்களுக்குத் தெரியாமல் தனிப்பட்ட ரீதியாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அல்லது காணொளிகளைப் பரப்பி விளம்பரம் கொடுப்பதாகப் பரப்புவது அல்லது அச்சுறுத்துவது. ஒருவரை அச்சுறுத்தி முகநூல் மற்றும் இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள் மூலம் ஒருவரது சுயம் பாதிக்கப்படக் கூடிய வகையில் அரைநிர்வாண, நிர்வாண படங்களை வெளியிடுதல்.

**எழுத்து ரீதியான பாலியல் துன்புறுத்தல்கள்** : மற்றவர்களை அவதூறு கூறும் நோக்கத்துடன் அல்லது ஒருவருடைய "நடத்தையை சீரழிப்பதற்காக" எழுதப்படும் பெயர் மற்றும் முகவரியற்ற கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் சுவரொட்டிகள்.

**இலத்திரனியல் வழியான பாலியல் துன்புறுத்தல்கள்** : பகிரப்பட்ட அலுவலக கணினிகள் அல்லது குழு

மின்னஞ்சல்களை தவறாகப் பயன்படுத்துதல், ஒருவருடைய இலத்திரனியல் சாதனங்களுக்குள் அத்துமீறி ஊடுருவி அங்கீகரிக்கப்படாத அவரின் தனிப்பட்ட தகவல்களை அணுகுதல் அல்லது அவற்றைப் பகிர்தல். உடல் ரீதியாக மற்றொருவரை பாலியல் ரீதியாக இழிவுபடுத்துவதற்காக சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் தவறான உள்ளடக்கத்தை உருவாக்குதல் மற்றும் பரப்புதல் இலத்திரனியல் வழிகளில் ஆள்மாறாட்டம் மற்றும் அச்சுறுத்தலை மேற்கொள்ளல். பழிவாங்கும் நோக்கங்களுக்காக மற்றொருவருக்குச் சொந்தமான இரகசியப் பொருட்களைச் பகிர்தல்.

**2.2 பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தல்கள்** : ஒரு நபருக்கு உயிரியல் பாலியல், பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை வெளிப்பாடுகளை மையப்படுத்தி தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளைக் குறிக்கிறது. இந்த நடவடிக்கைகள் நேரடியாக அவர்கள் வெளிப்படையான பாலியல் தன்மை கொண்டவர்களாக இல்லாதிருக்கலாம் ஆனால் அவன், அவள் உணரப்பட்ட அல்லது உண்மையான பாலியல், பால்நிலை அடையாளத்தின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவரை சங்கடப்படுத்தவோ, காயப்படுத்தவோ அல்லது இழிவுபடுத்தும் நோக்கத்துடன் செயல்படுதல் பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தலாகும். இதுபோன்ற துன்புறுத்தலை இன்னொருவருக்குத் ஏற்படுத்துமாறு பிறரை ஊக்குவிப்பதும் இவ்வகையின் கீழ் உள்ளடங்கும். வன்முறை அச்சுறுத்தல், வற்புறுத்தல் மற்றும் கையாளுதல் போன்றவை இதில் உள்ளடங்கும். எ.கா., திருமணம் ஆகாத ஆணை ”ஓரினச்சேர்க்கை” என்று அழைப்பது அல்லது குழந்தை இல்லாத திருமணமான பெண்ணை ”மலடி” என்று அழைப்பது இந்த வகையின் கீழ் வரும்.


## 2.3 பாலியல் வன்முறை என்றால் என்ன?

பாலியல் வன்முறை என்பது பாலியல் வன்கொடுமை, பாலியல் வல்லுறவு அனுமதியின்றி பிறரின் அந்தரங்க உறுப்புக்களை தொடுதல், பாலியல் பலாத்காரம் அல்லது அத்தகைய செயல்களைச் செய்ய முயற்சிப்பது. (ஆனால் அவை மட்டும் அல்ல) உடல் ரீதியான பல வகையான பாலியல் தீங்குகளை உள்ளடக்கியதாகும். இத்தகைய வன்முறை ஒரு நபரின் பாலியல் தன்மை அல்லது அடையாளத்தின் அடிப்படையில் இருக்கலாம், நெருங்கிய உறவுடையவர்களால் மேற்கொள்ளப்படும் பாலியல்

வன்முறை, உடலுறவு மற்றும் பலாத்காரமான கருக்கலைப்பு ஆகியவையும் இந்த வகையின் கீழ் உள்ளடங்குகின்றன. ஒரு நபரை அச்சுறுத்தும் அல்லது பயத்தை தூண்டும் அல்லது ஒரு நபரின் சுதந்திரத்தை குறைக்கும் இத்தகைய செயல்களை நடத்துவதற்கான அச்சுறுத்தல்களும் பாலியல் வன்முறை வகையின் கீழ் வரும்.

### 3. பகிடிவதையானது பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் கீழ் வருமா?

ஆம், பல சந்தர்ப்பங்களில், பகிடிவதை பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் வன்முறையின் வடிவத்தை எடுக்கிறது. பகிடிவதையானது பல்கலைக்கழகத்திற்கு புதிதாக வருபவர்களை அறிமுகம் செய்வதற்கான ஒரு பாதிப்பில்லாத வழி என்று சிலர் கருதலாம் ஆனால் அது உண்மையன்று.
மாணவர்களை பலாத்காரமாக நிர்வாணமாக நிற்கச் செய்தல், ஆபாசமான பாலியல் செயல்களைச் செய்ய அல்லது அவற்றை விபரிக்குமாறு அவர்களை வற்புறுத்துதல், ஆபாச காணொளிகளைப் பார்க்க கட்டாயப்படுத்துதல், உள்ளாடையின்றி விரிவுரைகளுக்கு வருமாறு கூறுதல், முதலாம் வருட மாணவர்களை வாய்மொழி ரீதியாக துஷ்பிரயோகம் செய்ய ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துதல், மேலும் ஆபாசமான வசனங்களை மனனம் செய்து சிரேஸ்ட மாணவர்களுக்கு மீண்டும் சொல்லச் சொல்லி வற்புறுத்துதல் போன்றன "பகிடிவதையின்" கீழ் நடக்கும் சில பொதுவான பாலியல் துஸ்பிரயோகமானதும் வன்முறையுமான செயல்களாகும்.



பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடும் தரப்பினர் ஒரே பால்நிலையைச் சேர்ந்தவர்கள் (அதாவது, சிரேஸ்ட ஆண் மாணவர்கள் முதலாம் வருட ஆண் மாணவர்களை பகிடிவதை செய்வது), பாலியல் துன்புறுத்தல் அ்லது வன்முறையில்லை என்று சிலர் நம்புகிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் பாலியல்

தன்மை அல்லது பால்நிலை அவற்றிற்கு உட்பட்டவர்கள் மீதான இத்தகைய பகிடிவதை துன்புறுத்தல் மற்றும் வன்முறையை ரத்து செய்யாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.
பகிடிவதைச் சூழலில் நீங்கள் செய்ய விரும்பாத ஒன்றைச் செய்யுமாறு கூறி உங்களை கட்டாயப்படுத்தினால், அது துன்புறுத்தல் மற்றும் வன்முறையாகக் கருதப்படும்.

**4.இரு நபர்களுக்கிடையில் ஒருமித்த பாலியல் செயல்கள் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் கீழ் வருமா?**

ஆம், அவர்களும் பின்வரும் சூழ்நிலைகளில் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் கீழ் வரலாம்:
<u>நிகழ்நிலவரம்1:</u> இரண்டு நபர்கள் உறவில் தொடர்பில் இருந்தாலும், ஒரு நபர் மற்றொரு நபரின் விருப்பத்திற்கு எதிராக பாலியல் செயல்களில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டால், அது பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் கீழ் வரும். எடுத்துக்காட்டாக, ஒரு நபர் மற்றவரை பாதுகாப்பற்ற உடலுறவில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தினால் அது கர்ப்பத்திற்கு வழிவகுக்கும் அல்லது பாலியல் அல்லது உடல்ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இது போன்ற வேறு சில செயல்களில் ஈடுபடுவதும் பாலியல் மற்றும் பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் கீழ் வரும்.


<u>நிகழ்நிலவரம் 2:</u> ஒருவர் பயத்தின் காரணமாக அல்லது நேரடி, மறைமுக அச்சுறுத்தல் காரணமாக மற்றொருவரால் பாலியல் செயல்பாடுகளில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டால், அவர், அவள் அதற்கு இணங்கவில்லை என்றால், அது பாலியல் மற்றும் பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் கீழ் வரும். எடுத்துக்காட்டாக, கல்வி அல்லது தொழில் அடிப்படையில் உங்கள் மீது அதிகாரம் உள்ள ஒருவர் பாலியல் உதவியைக் கோரினால், கல்வி அல்லது வேலைவாய்ப்பு தொடர்பான வெகுமதியை உங்களுக்கு தருவதாக உறுதியளித்தால் அல்லது நீங்கள் அதற்கு ஒப்புக்கொள்ளாத சூழ்நிலையில் அவர், அவள் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று நீங்கள் நம்புவதோடு உங்களுடைய உரிமையை நீங்கள் இழப்பீர்களானால் அது பாலியல் மற்றும்

பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் கீழ் வரும்.

சில சந்தர்ப்பங்களில், அத்தகைய உறவில் உள்ளபோது கீழ்நிலையில் அல்லது அடிபணிந்த நபர் விரும்புவது போல் அல்லது கோறுவது போல் தோன்றலாம். ஆனால் இவ்வாறான சம்பவங்களின் பின்னணியில் இரு தரப்பினருக்கும் இடையிலான சமத்துவமற்ற உறவுகள் இருப்பதை நாம் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. இணக்கம் தெரிவிக்கும் நபர், அவர் ,அவள் அதனை மறுத்தால், மதிப்பெண்கள், வகுப்பு, வேலை, உதவித்தொகை, புலமைப்பரிசில், பதவி உயர்வு அல்லது வேறு ஏதேனும் கல்வி அல்லது வேலை தொடர்பான நன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தண்டிக்கப்படலாம் என்று நினைக்கலாம்.
இத்தகைய கல்வி அல்லது தொழில் சூழ்நிலைகள் வேறுப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தலாம்:

உங்களுக்கு தகுதியற்ற ஒன்றை அல்லது உங்களுக்கு உரிமை இல்லாத ஒன்றை எதிர்பார்த்து நீங்கள் பாலியல் உதவிகளை வழங்கினால், அதற்கு உரிமையுடைய தகுதியான மற்றொரு சகமாணவர் அல்லது சகஊழியரை நீங்கள் இழக்க நேரிடலாம்.

நீங்கள் நிராகரிக்கப்படுவீர்கள் மற்றும் உங்களுக்கு உரிமையானதை இழக்கக்கூடும் என்ற பயத்தில், நீங்கள் யாரையாவது உங்கள் மீது பாலியல் ரீதியாக செயற்பட அனுமதித்தால், மாணவர் பணியாளராக உங்கள் உரிமைகளை மீறுவதற்கு மற்றொருவரை அனுமதிக்கிறீர்கள்.



உங்களுக்குக் கீழ் பணிபுரிபவரை, அதாவது, மாணவர் அல்லது பணியாளரை, சில நிறுவன சலுகைகளுக்கு ஈடாக, உங்கள் பாலியல் ஆசைகளை நிறைவேற்றும்படி கட்டாயப்படுத்தினால், நீங்கள் சட்டப்பூர்வமாக உங்களுக்கு அதிகாரமில்லாத சலுகைகளில் கொடுக்கல் வாங்கல்கள் செய்கிறீர்கள், மேலும் இது நீங்கள் பணியாற்றும் பல்கலைக்கழகத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தும்.

நிறுவனத்தில் உள்ள உறவுகளின் படிநிலை இயல்பு, அதாவது சிலருக்கு மற்றவர்களை விட அதிக அதிகாரம் உள்ளமையானது அத்தகைய சூழ்நிலைகளுக்கு வழிவகுக்கிறது என்பது நாம் இங்கே நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். ஆனால் பாலியல், பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் வன்முறை கொள்கையின் விதிகளைப் பயன்படுத்தி “இல்லை“ என்று சொல்லவும், அத்தகைய நபர்களுக்கு எதிராக முறைபாடு செய்யவும் நமக்கு உரிமை உண்டு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பல்கலைக்கழகத்தின் நியாயமான நலன்களுக்கு ஈடாக பாலியல் உதவி கோருவது அல்லது அதற்கு மறுத்தமைக்காக ஒருவரை அச்சுறுத்தி தண்டிப்பது பல்கலைக்கழகத்தின் கொள்கைக்கு எதிரானது.

## 5. பெண்கள் எப்பொழுதும் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையால் பாதிக்கப்படுகிறார்களா மறறும ஆண்கள் எப்போதும் பலியாக்குபவர்களா?

இல்லவே இல்லை. பெண்கள் மற்றும் ஆண்கள் இருவரும் இத்தகைய துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கு ஆளாகலாம், இருப்பினும் புள்ளிவிவரங்களின்படி, ஆண்களை விட பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஆனால், பாலியல் மற்றும் பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையின் முக்கிய நிர்ணயமாக அதிகாரம் இருந்தால், பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கு ஆண்களும் பெண்களும் பலியாகிவிடலாம் என்பதற்கான காரணத்தை இது குறிக்கிறது. ஆனால் , துன்புறுத்தல் மற்றும் வன்முறை புகார்களுடன் பாதிக்கப்பட்ட ஆண் முன் வருவதற்கு வழக்கமான பால்நிலை நியமங்கள் தடையாக இருக்கலாம்.

பாலியல் முன்னேற்றம் அல்லது முன்மொழிவு கோரப்படாமல் மற்றும் விரும்பத்தகாததாக இருந்தால், பாதிக்கப்பட்ட மற்றும் பலியாக்குபவரின் பால்நிலை முக்கியமற்றது



## 6. பாலியல் , பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை பற்றி நீங்கள் தெரிந்து கொள்வது ஏன் அவசியமாகின்றது?

மேலே குறிப்பிட்டுள்ளபடி, பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கு பல வடிவங்கள் உண்டு. பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையின் பல்வேறு செயல்கள், வடிவங்களைப் பற்றிய அறிவானது, இதுபோன்ற துன்புறுத்தல் செயல்களைப் பற்றி அறிந்திருக்கவும், இதுபோன்ற செயல்களை நீங்கள் அனுபவித்தால் அதற்காக நீங்கள் எங்கு ஆதரவைப் பெறலாம் என்பதை அறியவும், இதுபோன்ற சூழ்நிலைகளைத் தவிர்க்கவும், அவற்றைத் தடுக்கவும் உங்களின் நண்பர்களுக்குக் அறிவூட்டவும் உதவுகிறது. உங்கள் உரிமைகளைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்வதானது சுரண்டல், துஷ்பிரயோகம், வன்கொடுமை மற்றும் வன்முறைகள் ஆகியவற்றிலிருந்து விடுபடவும் உங்களின் உரிமைக்காக நிற்கவும், மற்றவர்களின் உரிமைகளை மதிக்கவும் உங்களுக்கு அதிகாரமளித்து உங்களைச் செயற்படுத்தும். அந்தவகையில் இவ்விழிப்புணர்வினூடாக பல்கலைக்கழத்தை பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையற்ற வலயமாக மாறுவதோடு அங்கு அனைவரும் தங்கள் கல்வி அல்லது தொழில் நடவடிக்கையை துஸ்பிரயோகம் மற்றும் வன்முறையின்றி தொடர முடியும்.

## 7. பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கான காரணங்கள் என்ன?

இங்கு ஒரு முக்கிய காரணத்தை மாத்திரம் குறிப்பிடுவது கடினம். அவற்றில் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**அதிகாரம்:** அதிகாரத்தில் ஏற்றத்தாழ்வு அல்லது படிநிலை தன்மை உள்ள இடங்களில், பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை நிகழலாம். பொதுவாக, பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரப் படிநிலை குறைந்தவர்களாகக் காணப்படுவர். ஒரு நிறுவனப் படிநிலையில் உயர்நிலையில் இருப்பவர்கள், ஊழியர்களாக இருந்தாலும் சரி, மாணவர்களாக இருந்தாலும் சரி, மற்றவர்களை தண்டனைகள் அல்லது விளைவுகளுக்கு அஞ்சாமல் துன்புறுத்தல் செய்ய அதிக வாய்ப்பு உள்ளது. அதிகாரம் முக்கியக் காரணம் என்பதைக் காட்டும் ஒரு சிறந்த உதாரணம் பகிடிவதையாகும். அங்கு கனிஷ்ட மாணவர்களான ஆண்களும் பெண்களும் தங்கள் சிரேஸ்ட மாணவர்களினால் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களை குற்றம் சாட்டும் மற்றும் அவர்களை அவமானப்படுத்தும் கலாசாரம். உதாரணமாக, ஒரு பெண் பலாத்காரம் செய்யப்பட்டதாக முறைபாடு செய்தால், சிலர் அவள் என்ன உடை அணிந்திருந்தாள், சம்பவம் நடந்த இடத்தில் அவள் ஏன் இருந்தாள், முதலிய கேள்விகளை கேட்பார்கள், இது பல பாதிக்கப்பட்டவர்கள் அமைதியாக இருக்கவும் நடைபெற்ற விடயங்களைக் கூறுவதற்கு முன்வருவதைத் தவிர்க்கவும் வழிவகுக்கிறது.



பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் குடும்பங்களில் இருந்து சிறியளவான ஆதரவே கிடைக்கும், அவர்கள் தங்கள் சமூக நிலைக்கு சேதம் விளைவிக்கும் அச்சத்தால் அல்லது பாதிக்கப்பட்டவரின் நற்பெயரைப் பாதுகாக்கும் விருப்பத்தால் தூண்டப்பட்டு இது போன்ற விடயங்களில் முறைபாடு செய்ய

முன்வர மாட்டார்கள். இவ் எண்ணம் பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கையை முழுமையாகப் பாதிக்கும்

**பாலியல் இரட்டைத் தரநிலை:** இலங்கைச் சமூகம் பொதுவாக, பெண்களை விட ஆண்களின் பாலியல் குறைபாடுகள் குறித்து மிகவும் தளர்வாக இருக்கிறது. சிறுமிகள் மற்றும் பெண்களிடம் எதிர்பார்க்கப்படும் உயர்தரமான பாலியல் நடத்தையானது சில பாதிக்கப்பட்ட பெண்கள் முன்வருவதைத் தடுக்கின்றது. ஏனெனில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான பாலியல் தூய்மை தொடர்பான விதிமுறைகளை கடைபிடிக்காவிடில் அவர்கள் அவமானப்படுத்தப்படுவார்கள் அல்லது குற்றம் சாட்டப்படுவார்கள் என்று அவர்கள் கருதலாம்.

**தண்டனையின்மை கலாசாரம்:** அவமானம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைக் குற்றம் சாட்டும் கலாசாரம் குற்றவாளிகள் தண்டனையைத் தவிர்த்து செல்ல அனுமதிக்கிறது. அவரது செயல்களைப் பற்றி பெருமை பேசவோ அல்லது பாதிக்கப்பட்டவரை மேலும் ஒடுக்கவோ கூடாது. சில சமயங்களில், இது தொடர்பில் அமைதியாக இருப்பதற்கு ஈடாக அதிக பாலியல் உதவிகள் அல்லது லஞ்சம் கோரப்படலாம்.

**ஓரினச்சேர்க்கை:** “எதிர்” பாலியல், பால்நிலையை உடையவர்கள் “இயற்கையாகவே” ஒருவரையொருவர் ஈர்க்கும் தன்மை கொண்டவர்கள். மற்றும் இலங்கைச் சமூகத்தில் எதிர் பால்நிலை திருமணமும் குடும்பமும் சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானத் தொகுதிகளாக அமைகின்றன என்ற அனுமானத்தின் அடிப்படையில், பெண் தன்பாலின சேர்க்கையாளர் ,ஆண் தன்பாலின சேர்க்கையாளர், இருபால் சேர்க்கையாளர், திருநங்கைகள், மூன்றாம் பாலினத்தவர் மற்றும் பிறர் (LGBTQ) போன்ற நபர்களை சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, இவ்வாறு அடையாளப்படுத்தப்படுபவர்கள் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் அதிகமாகும். இவர்கள் பாலியல், பால்நிலை ரீதியாக சிறுபான்மையினராகக் காணப்படுகின்றமையால் இதனால் பாதிக்கப்பட்டவர்கள் முறைபாடு அளிக்க முன்வருதல் தடுக்கப்படுகின்றது.

**8.பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் விளைவுகள் என்ன?**

காயங்கள் மற்றும் இறப்புகள், திட்டமிடப்படாத கர்ப்பங்கள், பாதுகாப்பற்ற கருக்கலைப்புகளால் இனப்பெருக்க அமைப்புக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், பாலுறவு நோய்களின் தாக்கம் போன்ற **உடல்சார் பிரச்சினைகள்** .

மனச்சோர்வு, மனமுறிவுகள், மோசமான கவனம் செலுத்துகை, குறைந்தளவான சுயமரியாதை மற்றும் மனநல கோளாறுகள் போன்ற **மனநலப் பிரச்சினைகள்.**

உறவு முறிவுகள், விவாகரத்து உட்பட சமூக மற்றும் குடும்ப உறவுகளில் ஏற்படும் பாதகமான தாக்கங்கள், வேலையைத் தடுத்து நிறுத்துவதில் உள்ள சிரமம் போன்ற **சமூகப் பிரச்சனைகள்.**

தக்கவைத்துக்கொள்ளல் தொடர்பான பிரச்சினைகளால் ஏற்படும் **நிறுவன ரீதியான இழப்புகள்** (அதாவது நல்ல மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களின் இழப்பு) குறைவான உற்பத்தித்திறன் அல்லது கல்வியில் அல்லது வேலையில் மாணவர், பணியாளரின் மோசமான செயற்றிறன்.

**9. பல்கலைக்கழகத்தில் பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைத் தடுப்புக் குழுவின் வகிபாகம் யாது?**

பல்கலைக்கழகத்தில் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையைத் தடுப்பதற்கான கொள்கை மற்றும் சட்டங்களைச் செயல்படுத்த, பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழுவால் 2018 இல் பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைத் தடுப்புக் குழு நியமிக்கப்பட்டது. இதன் மூலம் இக்குழு பேராதனை பல்கலைக்கழக்கத்திற்கு உதவுகிறது.

• பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தல் இல்லாத நல்ல கல்வி மற்றும் பணிச்சூழலைப் பேணுதல்

• முறைப்பாடுகளை விசாரிக்கவும் தீர்க்கவும் உடனடி மற்றும் நியாயமான பொறிமுறையை அமுல்படுத்தல்.

• பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான மற்றும் பொருத்தமான உதவிகளை வழங்குதல்

• அனைத்து மக்களும், வேறுபாடுகளின்றி, கண்ணியமாகவும், சமமான மனிதர்களாகவும் நடத்தப்படும் கலாசாரத்தை பல்கலைக்கழகத்தில் உருவாக்கிப் பராமரித்தல்.

பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை தொடர்பான பல்கலைக்கழக கொள்கைகள் மற்றும் சட்டங்கள் பற்றி மேலும் அறிய, பல்கலைக்கழகத்தின் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை குழுவின் வலைப்பக்கத்தைப் பார்க்கவும்.

## 10. பாலியல், பால்நிலைசார் துஸ்பிரயோகம் மற்றும் வன்முறை தொடர்பான முறைபாடுகளை யாரிடம் சமர்ப்பிக்க வேண்டும்?

உங்கள் முறைபாடுகளை துணைவேந்தரிடம் நேரடியாகச் சமர்ப்பிக்கலாம். பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை தொடர்பான குழுவின் தலைவருக்கு ஒரு நகலை அனுப்பலாம். பல்கலைக்கழகத்தில் நிகழ்நிலை புகார்கள் அல்லது இணைய முகப்பின் மூலமாகவும் புகார்களைச் செய்யலாம். பேராதனைப் பல்கலைக்கழக வலைப்பக்கத்தின் கீழ் வலது மூலையில் உள்ள ”விரைவு இணைப்புகள்” என்பதற்குச் சென்று, “முறைபாடுகள்” என்பதன் கீழ், உள்ள “முறைபாடுகள்” என்பதைக் கிளிக் செய்து, , “முறைபாடுகள்” என்பதன் கீழ், ”பாலியல் துன்புறுத்தல் மீதான புகார்கள்” என்பதைக் கிளிக் செய்யவும். இது உங்களை பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை தொடர்பான வலைப்பக்கத்தில் ”விரைவு புகார்களுக்கு” அழைத்துச் செல்லும்.
https://www.pdn.ac.lk/Complaints/complaints.php

நீங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை தொடர்பான வலைப்பக்கத்தில நிகழ்நிலை புகார்கள் இணைய முகப்பின் மூலமாகவும் புகார் அளிக்கலாம்.
https://eugc.ac.lk/complaint-portal/instruction.php

## 11. முறைபாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகள் என்ன?

• ஆரம்ப முறைபாடுகள் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ பதிவு செய்யப்படலாம். வாய்வழி முறைபாடாக இருந்தால், விசாரணைக்கு முன்னதாக எழுதுவதற்கு உறுதியளிக்கப்படும்

• முறைபாடுகளை பெயர் மற்றும் முகவரி இல்லாமலோ அல்லது ஒருவரின் சொந்த பெயரிலோ மேற்கொள்ளலாம். முறைபாடுகள் பெயர் மற்றும் முகவரி இல்லாததாக இருந்தால், முறைபாட்டின் நம்பகத்தன்மை விசாரணைக்கு முன் சரிபார்க்கப்படும்

**முக்கியக் குறிப்பு:** முறைபாடுகளைத் தெரிவிக்க குறிப்பிட்ட காலவரையறை எதுவும் இல்லை. சம்பவத்திற்கும் முறைபாட்டிக்கும் இடையில் காலதாமதம் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைத் தடுப்புக் குழுவுடன் கலந்தாலோசித்து பொருத்தமான காலகட்டம் எது என்பதைத் துணைவேந்தர் தீர்மானிப்பார். (பல்கலைக்கழக பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை கொள்கையின் பக்கம். 5ஐப் பார்க்கவும்)



## 12. பாலியல் , பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை மீதான முறைப்பாடுகள் எவ்வாறு விசாரிக்கப்படுகின்றன?

• முறைப்பாடு கிடைத்ததும், துணைவேந்தர் ஒரு ஆரம்பநிலை விசாரணைக் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுப்பார்.

• முறைப்பாடானது முறையான விசாரணைக்குத் தகுதியானது என்று ஆரம்பநிலை விசாரணைக் குழு கண்டறிந்தால், சபை முறையான விசாரணைக் குழுவை நியமிக்கும்.

• முறைப்பாடு செய்பவர் விரும்பினால், கொள்கைக்கிணங்க அணுகக்கூடிய முறையான மத்தியஸ்த செயல்முறையை நாடலாம்.

(ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் பல்வேறு விசாரணைக் குழுக்களின் அமைப்பு பற்றி மேலும் அறிய, சட்ட விதிகளின் 3.2 மற்றும் 3.4 ஐப் பார்க்கவும்.)

## 13. பாலியல் , பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான முறைப்பாடுகளின் இரகசியத்தன்மை என்ன?

முறைப்பாடு செய்பவர்கள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களின் அடையாளம் மற்றும் நடவடிக்கைகளின் விபரங்களைப் பாதுகாக்க பல்கலைக்கழகம் தன்னால் முடிந்த அனைத்தையும் மேற்கொள்ளும். இரகசியத்தன்மையை மீறுபவர்கள் மீது பல்கலைக்கழகம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

(இது பற்றி மேலும் அறிய பல்கலைக்கழக பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை கொள்கையின் பக்கம். 5ஐப் பார்க்கவும்)

## 14. பழிக்கு பழிவாங்கல்கள் பற்றிய பல்கலைகழக்கத்தின் நடவடிக்கை யாது?

புகார்கள், சாட்சிகள் அல்லது விசாரணைக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு எதிரான பழிவாங்கல் மற்றும் பழிவாங்கும் அச்சுறுத்தல்களை பல்கலைக்கழகம் தீவிரமாக எடுத்துக்கொள்கிறது .இதுபோன்ற செயல்கள் அல்லது முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட நேரிடும். பாதிக்கப்பட்டவரால் புகார் அளிக்கப்பட்டால், பழிவாங்கும் வாய்ப்பை நீக்குவதற்கு பல்கலைக்கழகம் சரியான நடவடிக்கை எடுக்கும்.

**15. பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கக் கூடிய சட்ட மற்றும் மருத்துவ உதவிகள் யாவை?**

பாதிக்கப்பட்டவர்களால் வெளிப்படுத்தப்பட்ட விருப்பங்கள் மற்றும் அவர்களுக்கு உடனடியாக என்ன தேவை என்பது தொடர்பான பல்கலைக்கழகத்தின் சொந்த மதிப்பீட்டின் அடிப்படையில் உதவிகள் வழங்கப்படும அவர் மருத்துவ ரீதியாக,ஆலோசனை அல்லது சட்ட ஆலோசனை பெற பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்கலைக்கழகம் வழிகாட்டும்



பாதிக்கப்பட்டவருக்கு உடல்நலம் தொடர்பான உதவி தேவைப்பட்டால் அவர் பல்கலைக்கழக சுகாதார நிலையத்தின் தலைமை அதிகாரியிடம் அனுப்பப்படுவார். அவர் பாதிக்கப்பட்டவருக்கு பொருத்தமான வழியைப் பரிந்துரைப்பார். இது ஆலோசனையாக இருந்தால், பாதிக்கப்பட்டவர் பல்கலைக்கழகத்தின் ஆலோசனை மையமான சுகாதார நிலையத்தில் உள்ள ஆலோசனை பிரிவிற்கு அனுப்பப்படுவார். முறைப்பாட்டிற்கு சட்டத்தின் தலையீடு தேவைப்பட்டால், பல்கலைக்கழகத்தின் சட்ட அதிகாரி பாதிக்கப்பட்டவருக்கு தேவையான சட்ட உதவியைப் பெற வழிகாட்டி உதவுவார்.

**எவ்வாறு தொடர்பு கொள்வது:**

சுகாதார மையம்,பேராதனைப் பல்கலைக்கழகம்: +94 81 2392324

சட்டப் பிரிவு,பேராதனைப் பல்கலைக்கழகம்: +94 81 239232/
+94 81 2392432

பாலியல் மற்றும் பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைத் தடுப்புக் குழுவின்
மின்னஞ்சல்:SGBHSV@pdn.ac.lk

### 16. குற்றவாளிகளுக்கு என்ன வகையான தண்டனை கிடைக்கும்?

**அது பணியாளர்களின் உறுப்பினராக இருந்தால்**, முறையான விசாரணைக் குழுவின் அறிக்கையின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் கவுன்சில் ஒரு தண்டனையை விதிக்கலாம். பல்கலைக்கழக ஸ்தாபனக் குறியீட்டின் XXII அத்தியாயத்தின் பிரிவு 4 இல் பட்டியலிடப்பட்டுள்ள சில முக்கிய தண்டனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- ஒரு வருடத்திற்கும் அதிகமான காலத்திற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள உயர்வு அதிகரிப்புகளை நிறுத்துதல், குறைத்தல் அல்லது ஒத்திவைத்தல்
- குறிப்பிட்ட காலத்திற்கு எந்தவொரு பதவி உயர்வுத் தேர்வுகளிலும் அமர்வதில் இருந்து தகுதி நீக்கம் செய்தல்
- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பதவி உயர்வு ஒத்திவைப்பு
- பணிமூப்பினை குறைத்தல்
- தரவரிசை குறைப்பு
- பொது திறமையின்மைக்கான ஓய்வு
- சேவைகளை நிறுத்துதல்
- பணிநீக்கம்.

இன்னும் விரிவான பட்டியலுக்கு பல்கலைக்கழக ஸ்தாபனக் குறியீட்டின் XXII அத்தியாயத்தின் 4வது பிரிவைப் பார்க்கவும்.

**அது ஒரு மாணவராக இருந்தால்,** ஒழுக்கம் குறித்த மாணவர் சட்டத்தின் பிரிவு 27 இல் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தண்டனைகளை ஒழுக்காற்றுச் சபை துணைவேந்தருக்கு பரிந்துரைக்கலாம்.

- எழுத்து மூலமான எச்சரிக்கை அல்லது கடுமையான கண்டனம்
- பல்கலைக்கழகத்தில் இருந்து இடைநீக்கம்
- குடியிருப்பு வசதிகள் மற்றும் தங்குமிடங்களை திரும்பப் பெறுதல்
- எந்தவொரு நிதி நன்மைகள், உதவி அல்லது விருதுகளை திரும்பப் பெறுதல், ரத்து செய்தல் அல்லது இடைநிறுத்துதல்

- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எந்தப் பல்கலைக்கழகத் தேர்விலும் அமர்வதில் இருந்து தகுதி நீக்கம்
- எந்தவொரு பல்கலைக்கழக தேர்வு முடிவுகளையும் குறிப்பிட்ட காலத்திற்கு வெளியிடுவதை நிறுத்துதல்
- பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேற்றம்.
- மேலும் விரிவான விளக்கத்திற்கு, ஒழுக்கம் குறித்த மாணவர் சட்டங்களின் பிரிவு 27 ஐப் பார்க்கவும்

**17. பல்கலைக்கழகத்தை பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை இல்லாததாக மாற்ற உங்களால் என்ன செய்ய முடியும்?**

நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் மட்டுமே ஒவ்வொருவரும் துன்புறுத்தல் மற்றும் வன்முறையின்றி தங்கள் கல்வி அல்லது தொழிலை தொடர முடியும் மற்றும் பல்கலைக்கழகத்தை அனைத்து நபர்களின் உரிமைகளும் மதிக்கப்படும் இடமாக மாற்ற முடியும். மேலும் உங்களால் மேற்கொள்ளக்கூடிய சில விடயங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன:


- விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகளில் சேர்தல். இதன் மூலம் துன்புறுத்தல் மற்றும் வன்முறை என்றால் என்ன என்பதை நீங்கள் நன்கு அறிந்துகொள்ள முடியும். பாலியல் மற்றும் பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை தொடர்பான கலந்துரையாடல்களில் உங்கள் நண்பர்கள் மற்றும் சக பணியாளர்களை ஈடுபடுத்த முயற்சிக்கவும் இதன் மூலம் அவர்களிடமுள்ள பால்நிலை மற்றும் பாலியல் தொடர்பான தவறான எண்ணங்களை அகற்ற முடியும்.

- பேராதனைப் பல்கலைக்கழகக் கொள்கையில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் வடிவங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகளில் உங்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் விடயத்தை வெளிப்படுத்தவும் அல்லது அதனை எதிர்க்கவும் முடியும்.

• பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களை எப்போதும் ஆதரிக்கவும் மற்றும் பாலியல், பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையின் கீழ் வரும் குற்றங்கள் பற்றிய தகவல்களை மறைக்க வேண்டாம். அவ்வாறு ஒரு குற்றம் தொடர்பில் நீர் அழைக்கப்பட்டால் சாட்சியாக முன்வர தயாராக இருக்கவும்.


• பாலியல் மற்றும் பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை மற்றும் பால்நிலை தொடர்பான தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை மையமாகக் கொண்டு உங்கள் ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் ஆய்வறிக்கைகளை உருவாக்குதல்.

• உங்கள் படைப்பு முயற்சிகளில் பாலியல் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை மற்றும் பால்நிலை தொடர்பான தலைப்புகளை முன்னிறுத்தவும்: கவிதைகள் மற்றும் கதைகள், மேடை நாடகங்கள், படங்களை வரைதல். இந்த கருப்பொருளில் உங்களுக்கு ஊக்கமளிக்கும் பிற சாத்தியமான ஆக்கப்பூர்வமான முயற்சிகளைப் பற்றி சிந்தியுங்கள்.





துன்புறுத்தல்



துன்புறுத்தலை
சகித்துக்
கொள்ளல்



குற்றவாளியை
தண்டித்தல்

# நன்றிகள்

**ஆங்கில பதிப்பு**
பேராசிரியர் காமென் விக்ரமகமகே
ஓய்வு பெற்ற பேராசிரியர் ஜயந்தி எதிரிசிங்க

**சிங்கள பதிப்பு**
ஓய்வு பெற்ற பேராசிரியர் கமலா லியனகே

**சிங்கள மொழிபெயர்ப்பு**
திருமதி. நவோமி கோன்ரா

**தமிழ் மொழிபெயர்ப்பு**
திருமதி ஷோபனா ராஜேந்திரன்

**வரைபடங்களின் வடிவமைப்பு**
செல்வி உதானி பர்னகம

**வடிவமைத்தல்**
பேராசிரியர். ரூபிக்கா ராஜகருணா

**ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு**
பேராசிரியர் சார்மலி அபயசேகர

**நிதி**
பேராதனைப் பல்கலைக்கழகம்

# நினைவில் கொள்ளுங்கள்

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் வன்முறை காரணமாக பலர் பாதிக்கப்படுவதோடு சிலர் அமைதியான முறையில் பாதிக்கப்படுகின்றனர். இதனால் சிலர் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுகிறார்கள். இதன் காரணமாக மற்றவர்களால் முன்னரைப்போன்று சிறப்பாக செயற்பட முடியாது போகின்றது. இதனை நாம் ஏன் பொறுத்துக்கொள்ள அல்லது மன்னிக்க வேண்டும்? பாலியல் மற்றும் பால்நிலைசார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையைத் தடுக்க கைகோர்ப்போம். அதனை நமது பல்கலைக்கழகத்தில் இருந்து ஒழிப்போம்.